கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 23 சனிக்கிழமை (05 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 70

## ஸ்ரீலங்கா சுதந்திர தினப் பேச்சில்

# அரசியல் தீர்வு பற்றி டி.பி. மூச்சுவிடவில்லை

# பயங்கரவாத ஒழிப்புக்கே அவர் முதன்மை

## இராணுவ நடவடிக்கைக்கு தயாராகுவதாக கருத்து

கொழும்பு, பெப்ரவரி 5

ஸ்ரீலங்காவின் சுதந்திர தின கொண்டாட்டங்களை நேற்றுத் தொடக்கி வைத்துப் பேசிய ஜனாதிபதி டி,பி, விஜேதுங்கா தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து மூச்சுவிடவில்லை.

வடக்கில் பயங்கரவாதமே நடப்பதாகக் குறிப்பிட்டு அதனை ஒழித்துக் கட்டுவது பற்றியே முதன்மை கொடுத்துப் பேசினார்,

ஜனாதிபதி விஜேதுங்காவின் சுதந்திர தினப் பேச்சு, அரசாங்கம் இராணுவ நடவடிக்கைக்கு தயாராகுவதையே கோடிட்டுக் காட்டுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது துரிதப்படுத்தப்படவேண்டும் என்று ஜனாதிபதி விஜயதுங்கா தனது சுதந்திரதின உரையில் குறிப்பிட்டுள்ளாராயினும் அரசியல் தீர்வு காணப்படுவது பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை—

இனவாத தீவிரவாதக் கருத்துக்களை பரப்புபவர்களையும் அவர் கண்டித்துள்ளார்.

வடக்கு யுத்தத்தை நிறுத்துவது தற்போது எக்காலத்தையும் விட அத்தியாவசியமாகியுள்ளதென தெரிவித்த ஜனாதிபதி, யுத்தம் மற்றும் செலவு பற்றி பேசினாரே ஒழிய அரசியல் தீர்வு குறித்து எதுவும் குறிப்பிடவே இல்லை—

வடபகுதிப் பிரச்சினையை ஜனாதிபதி பயங்கரவாதம் என்று மீண்டும் மீண்டும் தனது உரையில் வலியுறுத்தினார்—என்று பி. பி. ஸியின் சிங்கள சேவைச் செய்தியாளர் தெரிவித்தார்.

சந்தேகத்துக்கு உரியது

ஜனாதிபதி விஜேதுங்காவின் சுதந்திரதினப் பேச்சு, இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த எண்ணங்கொண்டுள்ளது என்ற அரசின் முந்திய அறிவிப்பு குறித்து சந்தேகத்தை எழவைத்துள்ளது.

தீவிரவாதத்தை அழிக்கின்றோம் என்ற பெயரில் அர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வயலில் மிதிவெடி: இளைஞர் கால் இழந்தார்

விதைத்த வயலைப் பார்த்துவிட்டு வரச் சென்றவர் வயல் பகுதியில் இருந்த மிதிவெடியில் சிக்குண்டு, வலது கால் பாதத்தை இழந்தார்.

மாதகல் தும்பளைப்பாய் வயல் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் திருவடி நிலையைச் சேர்ந்த வைரவன் மனோகராசா (வயது 22) என்ற இளைஞனே காலை இழந்தவராவார்.

## ஆஸ்பத்திரி வலயம் மீதான தாக்குதலை நிறுத்துங்கள்!

### டி. பியிடம் செஞ். அதிகாரி வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். போதனா வைத்திய சாலைப் பாதுகாப்பு வலயப் பகுதியில் விமான மற்றும் ஷெல் தாக்குதல்கள் இனிமேல் நடக்காமல் உத்தரவாதம் வழங்கவேண்டும்

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரி பிலிப் கொன்ரசா இவ்வாறு கோரியுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த 23 ஆம் திகதி இலங்கை வந்த அவர், யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய பின் கொழும்பு திரும்பியிருந்தார்.

இவ்வாரு ஆரம்பத்தில் கொழும்பில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க, பாதுகாப்பு அமைச்சச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ஆகியோரையும் இராணுவ, விமானப்படை தளபதிகளையும் அவர் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மெதடிஸ்த தூதுக்குழுவினர் இன்று புலிகளுடன் பேச்சு

யாழ்ப்பாணம், பெப். 5

நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் மெதடிஸ்த திருச்சபை குழுவினர் இன்றுமாலை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்து பேசவிருக்கின்றனர்.

இப்பேச்சுக்களின் போது, இன்றைய அரசியல் நிலைமை, தமிழ்மக்கள் எதிர் நோக்கும் இன்னல்கள் ஆகியன பற்றி ஆராயப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நேற்று யாழ்நகரில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட சேதங்களை மெதடிஸ்த தூதுக்குழுவினர் பார்வையிட்டனர்.

(உ-3)

## பல லட்சம் ரூபா சன்மானம்!

## செய்யாத தீரச் செயலுக்கு பரிசுபெற்ற அதிகாரிகள்

### எஸ். பி. அம்பலப்படுத்துகிறார்

கொழும்பு, பெப். 5

செய்யாத பல வீரதீரச் செயல்களைத் தாம் புரிந்ததாகக்கூறி, லட்சக்கணக்கான ரூபா சன்மானமாக உயர் பொலிஸ் அதிகாரிகள் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் மோசடி ஒன்று அம்பலப்படுத்தப்பட்டுள்ளது

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். ஏ. ஏ. டி. செனவிரத்னா உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அடிப்படை உரிமை தொடர்பான மனு ஒன்றில் இது பற்றிய விவரத்தைத் தெரிவித்துள்ளார்.

இரகசிய பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரும், கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபரும், ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படையினருக்கு பொருள்கள் சேகரிக்க பாத யாத்திரை

### நேற்று முதல் நாளை வரை

கொழும்பு, பெப். 5

வடக்கில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினருக்கு அத்தியாவசியப் பொருள்களைச் சேகரிப்பதற்காக குருநாகல் மாவட்டத்தில் நேற்று முதல் தொடர் பாத யாத்திரை ஒன்று நடத்தப்படுகிறது.

மாவத்தகம மல்லவபிற்றியாவிலிருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் நாளை வரை நடைபெறும். மல்லவபிற்றிய இளைஞர் சபை இந்தப் பாத யாத்திரையை ஏற்பாடு செய்திருக்கிறது.

கிடுகு, அரிசி, தேங்காய், துணிமணி மற்றும் பிற பொருள்கள் இந்தப் பாத யாத்திரையின் போது மக்களிடமிருந்து சேகரிக்க அதன் ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

[உ-3-6]

### வடக்கு - தெற்கு பிரச்சினைக்கு

## மத ஸ்தாபனத் தலைவர்கள் மத்தியஸ்தம் செய்ய வேண்டும்

### மெதடிஸ்த திருச்சபை செயலாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 5

வடக்கு — தெற்கு மக்களுக்கு இடையேயான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச மத்தியஸ்தத்தை இலங்கை அரசு ஏற்க மறுத்த நிலையில் —

மத ஸ்தாபனங்களும் மதத் தலைவர்களுமே மத்தியஸ்த முயற்சியில் முன்னின்று உழைக்க வேண்டும்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் அருட்திரு டுலிப்பெர்னாண்டோ இவ்வாறு கூறினார்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் மெதடிஸ்த நல்லெண்ணக்குழுவின் வருகையை ஒட்டி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் "வடக்கு — தெற்கு, கிறிஸ்தவ கண்ணோட்டம்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

அருட்திரு ஏ டபிள்யு. ஜெபநேசன் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்

அருட்திரு. டுலிப்பெர்னாண்டோ அங்கு கூறியதாவது:-

இலங்கை அரசாங்கம் வடக்கு - தெற்குப் பிரச்சினையைத் தீர்க்க சர்வதேச மத்தியஸ்தத்தை மறுத்த நிலைமையில் மத ஸ்தாபனங்களும் தலைவர்களும் மத்தியஸ்த முயற்சியில் முன்னிற்க வேண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அதிமேற்றிராணியார்-புலிகள் பேச்சுக் குறித்து திருப்தி

கொழும்பு, பெப். 5

அண்மையில் வடபகுதிக்கு விஜயம்செய்திருந்த கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கிலாஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையிலான குழு, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்கள் நம்பிக்கையளிப்பனவாக உள்ளன.

தகவலறிந்த வடாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இவ்வாறு குறிப்பிட்டது.

(உ-எ-3)

## காமினியை ஜனாதிபதியாக்க தொண்டா தீவிரமுயற்சியாம்

கொழும்பு, பெப். 5

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவை ஸ்ரீலங்காவின் அடுத்த ஜனாதிபதியாக கொண்டு வரும்முயற்சியில் தொண்டமான் தீவிரமாக இறங்கியிருப்பதாக 'லக்திவ' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு யுத்தத்தை நிறுத்தி சுமுகமான தீர்வு ஒன்றைக் காணவும்—

மலையக மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்த்து வைக்கவும்—

பொருத்தமான நபர் காமினி திஸநாயக்கா தான் என்று தொண்டமான் நம்புவதாகவும் அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ. ஐ. தே. முன்னணியில் இருந்தால் காமினி ஜனாதிபதியாகும் வாய்ப்பு இல்லை என்றும்—

எனவே ஐ. தே. கவில் அவர் சேருவதே அதற்கு வழி என்றும் தொண்டமான் காமினிக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காமினியை ஜனாதிபதியாக்கும் முயற்சியில் தொண்டமான் ஐ. தே. கவுக்கு உள்ளேயும் வெளியேயும் தீவிரமாக செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

### முச்சந்தி முனி



தேர்தலை நடத்தி முடிக்கும் வரைக்கும் உவர் உந்தப் பாட்டுத் தானே பாட வேணும்......!

## 'மாஹோ' கப்பல் நாளை மறுதினம் வந்து சேரும்

யாழ்ப்பாணம், பெப். 5

ஒரு தொகுதி பரல் மண்ணெண்ணெயுடன் 'மாஹோ'கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பல் நேற்று மாலை கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட ஏற்பாடாகியிருந்ததாக செஞ்சிலுவைச் சங்க யாழ். அலுவலக அதிகாரி நேற்று மாலை தெரிவித்தார்.

இக்கப்பலில் மலேரியா நோய் தடுப்புக்கான மலத்தின் எடுத்து வர ஏற்பாடாகியிருந்தாகவும் அவர் தெரிவித்தார்.

[உ-3]

## இன்று படகுச் சேவை

யாழ்ப்பாணம், பெப். 5

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(உ-3)

## பருத்தித்துறை — திருமலை இடையே படகுச் சேவை

### செஞ். சர்வதேசக் குழு நடத்தும்

யாழ்ப்பாணம், பெப். 5

திருகோணமலைக்கும் — பருத்தித்துறைக்கும் இடையில் படகுச் சேவை ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நடத்தவிருக்கிறது.

மனிதாபிமான அடிப்படையிலான சேவைகளுக்காக — சுமார் 500 மெற்றிக் தொன் பொருள்கள் அவசர தேவைக்காக எடுத்து வரவும் —

நோயாளர்களை அழைத்துச் செல்லவும் —

இப்படகுச்சேவை நடத்தப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### தமது திருச்சபை ஊடாக

## யுத்த நிறுத்தம் ஏற்படுத்த அங்கிலிக்கன் ஆயர் முயற்சி!

யாழ்ப்பாணம், பெப். 5

"எங்கள் திருச்சபையின் ஊடாக யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நான் ஸ்ரீலங்கா அரசை வலியுறுத்தி வருகிறேன்."

அங்கிலிக்கன் ஆயர் அதிவண கெனத் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் வைத்து அவர் 'புலிகளின் குரல்' வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்கி, அதன் மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என சிங்கள மக்களில் பெரும்பாலானோர் வலியுறுத்துகின்றனர் —

என்னைச் சந்தித்த பெருமளவு சிங்கள மக்கள் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்தினர்.—

ஆனாலும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி வடக்கு - கிழக்கில இனப்பிரச்சினை இல்லை அங்கு பயங்கரவாதப் பிரச்சினையே நிலவி வருவதாக அடிக்கடி கூறி வருகிறார். இது வெறுமனே சிங்கள மக்களை திருப்திப்படுத்துவதற்கான செயற்பாடே.

என்னைப் பொறுத்த வரை வடக்கு - கிழக்கு பகுதிகளில் இனப்பிரச்சினை காணப்படுகிறது. அதனாலேயே தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள்.

சிங்கள-பௌத்த அமைப்புகள் இனவாதத்தை தூண்டும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் உணவுத் தட்டுப்பாடு அரசாங்கமே முழுப் பொறுப்பு!

### செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அல்ல என்கிறார் அதிகாரி

யாழ்ப்பாணம், பெப் 5

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் எடுத்து செல்லும் வாகன அணிகளுக்கான பாதுகாப்பை எமது அமைப்புவிலக்கியதால், அங்கு ஏற்பட்டுள்ள உணவு தட்டுப்பாட்டு[illegible] அமைப்பு எவ்விதத்திலும் பொறுப்பல்ல. [illegible] அரசாங்கமே அங்குபொருள்களை அனுப்புவதற்குமுழுப்பொறுப்பாகும்.

இப்படிக் கூறினார் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் (ஐ. சி. ஆர். சி யின்) யாழ். அலுவலக அதிகாரி திரு. செற்றிக்பிரலா. முல்லைத்தீவில் [illegible] வாகியுள்ள உணவு தட்டுப்பாடு [illegible] போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வாரம் தோறும் 250 முதல் 275 லொறிகளில் தனியார் துறையினர் பொருள்களை எடுத்துச் சென்றனர். நாம் வாராந்

(4 ஆம் பக்கம்பார்க்க)

### குண்டு வீச்சில் சேதமுற்ற

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு ஆயர் கெனத்குழு விஜயம்

யாழ்ப்பாணம், பெப். 5

ஸ்ரீலங்கா விமானப் படையின் விமானக் குண்டுவீச்சால் சேதமடைந்த கிளிநொச்சி ஆஸ்பத்திரியை அங்கிலிக்கன் ஆயர் கெனத்தும் அவரதுகுழுவினரும் நேற்றுக் காலை பார்வையிட்டனர்.

ஆஸ்பத்திரி அதிகாரிகள் ஆஸ்பத்திரிக்கு ஏற்பட்ட சேதங்களை அவர்களுக்கு எடுத்துக் கூறினர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தின் வன்னி பெருநிலப்பரப்பு பொறுப்பாளர் திரு. எழிலரசன் மற்றும் அதன் துணைப் பொறுப்பாளர் திரு. மதன் ஆகியோரும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

இந்த ஆஸ்பத்திரிக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெற்கில் தாம் சந்திக்கும் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவதாக ஆயர் அங்கு குறிப்பிட்டார்.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3 சில்லு சைக்கிள் ஒன்று, தடி வன்றுகோல் இரண்டு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. குழந்தை வடிவேலு, கைதடி வடக்கு, கைதடி. [6937]

இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு, புதன் கிழமைகளில் 8-00 — 10 30 மணி வரை சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். [29228]

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: C. மகேசன் 286, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகில், யாழ்ப்பாணம். (29216)

Christombo Farm Golden Comet Pullets Cockerels கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [29257]

இறைச்சிக் கோழிகள் ஒரு கிலோவிலும் அதற்கு மேற்பட்ட நிறைகளிலும் விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 698/15, சபாபதி வீதி, தலையாளி (வைரவர் கோயிலடி), யாழ்ப்பாணம். [29265]

புதிய Lio T. V Deck ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [29273]

Prima சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [29272]

## HOUSE FOR SALE

Large modern house situated at 26, Eachchamoddai Road, Jaffna close to St. Johns and Girls' College avilable for sale Contact:Wilfred 23, Vidane's Road, Chundikuli. (29270)

## வீடு விற்பனைக்கு

மூன்று அறையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட 2½ பரப்பிலமைந்துள்ள வீடு கொக்குவிலில் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: 8, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். [29269]

## கணிதம் (O/L)

உயர் சித்தியடைய கணிதம் (O/L), தனித்தனி கற்கலாம். 35 வருட அனுபவ ஆசிரியர் கற்பிக்கிறார் வீ சே. கந்தசாமி, புளியங்கிணற்றடி, ஏழாலை மேற்கு, சுன்னாகம். (6942)

## ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் பாவித்து பயன்பெறுங்கள். தங்களின் ஆலோசனையுடன் சீயாக்காய் லேபலில் உள்ள 'கோபுரம்' சின்னம் மூன்று சேர்த்து அனுப்பவும் சிறந்த ஆலோசனையல் குலுக்கல் மூலம் பரிசு 250/- வழங்கப்படும். 'ஆனந்தம்', கைதடி எனும் முகவரிக்கு அனுபவும். [6938]

## தேவை

அனுபவமும், திறமையும் உள்ள விற்பனையாளர்கள், உதவியாளர்கள் தேவை. விற்பனையாளர்கள் 10 வருடத்திற்கு குறையாத அனுபவத்துடனான நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி, புதிய இல 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் [சி 7221]

வயோதிபத் தம்பதிகளுக்கு சமையல் செய்யவும், வீட்டை நிர்வகிக்கவும் தெரிந்த குடும்பப் பொறுப்பற்ற பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசலாம் உடன் வரவும். 25, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். (6944)

## தவறிவிட்டது

வவுனியா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த புத்திர கொண்டான் செல்வகுமார் என்பவரது அடையாள அட்டை 1-2-94 அன்று காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் சைமன் வர்த்தக நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [29254]

ந. சோமசுந்தரம் என்பவரது குடும்ப அட்டை, உணவு முத்திரையின் அடிக்கட்டை, உணவுப் பங்கீட்டு அட்டை அடங்கிய பை ஒட்டுமடத்தடியில் காரைநகர் M.P.C S. கிளையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 7, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி என்ற விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். [29266]

ரெத்தினம் மான் கர்வாரியோ ஆகிய நான் ஆலங்கேணியில் இருந்து கிளிநொச்சி செல்லுகையில் இல. 336831784X தேசிய அடையாள அட்டையும், பயண அனுமதி அட்டையும் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் B. S. M. கோமஸ் பிரகாஸ் ஸ்ரோர்ஸ், 87, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். [6946]

## பாலர் ஆசிரியர் பயிற்சி

கடைசித் தவணைக்க பொ. த. (சா/த) சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர், தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6943)

## வயலின்

நல்ல நிலையில் உள்ள செக்கோஸ்லேவேக்கியா தயாரிப்பு வயலின் விற்பனைக்குண்டு தொடர்பு; பூ. குலராஜசிங்கம், இலட்சுமணன் வீதி, V.C Office அருகில், கோப்பாய் தெற்கு, கோப்பாய். [6945]

## மணப்பெண்கள் தேவை

பிரான்ஸிலுள்ள 38 வயது கத்தோலிக்கருக்கும், செவ்வாய்க்குற்றமற்ற 27, 32, வயது கனடா உத்தியோகத்தர்களுக்கும், 31 வயதான இரண்டு டாக்டர்களுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [29271]

# ஆண்டு இரண்டு புதியபாடத்திட்டம்

கொழும்பு, பெப். 5

இந்த வருடம் இலங்கையின் சகல பாடசாலைகளிலும் ஆண்டு இரண்டிற்கான புதிய பாடத் திட்டம் அறிமுகமாகிறது. இது பற்றிய சுற்று நிருபம் ஒன்று சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது. (ச)

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 28 — 04 — 1925



மறைவு: 27 — 01 — 1984

## அமரர் சென்பற்சோதி குலேந்திரசிங்கம்

(ஓய்வு பெற்ற P. W. D. ஓவசியர்)

திதி: 05-02-1994

பத்தாண்டுகள் கடந்து விட்டபோதும் – பப்பாவின்
பண்பான முகமது கண்ணில் நின்றாடுதே
முத்தான நினைவுகள் எங்கள் மனதை
நித்தமும் நிழல் போல் தொடர்கிறதே - பப்பா!
பாடுபட்டீர்கள் பிள்ளைகள் பயன்பெற
பலன் அடையும் வேளையிலே
கண் காணத் தூரம் சென்றீர்கள் - பப்பா!

தன்பத்தில் துவளும்;

க. விநாயகமூர்த்தி, கப்பல் வளவு, கே. கே. எஸ். றோட், சுன்னாகம்.

மனைவி பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(6792)

# 8 ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 05 — 1965



மறைவு: 04 — 02 — 1986

## செல்வன் பொன்னம்பலம் உமாபரன்

(யாழ். இந்துக் கல்லூரி க. பொ. த உயர்தர வகுப்பு மாணவன்)

திதி: 05-02-1994

மனித வாழ்க்கை நிலையற்றது என்பதை உணர்ந்தும் உங்கள் பிரிவுத் துன்பம் எங்களை காலம் காலமாக வாட்டிக் கொண்டே இருக்கிறது.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்புள்ள அப்பா, அம்மா,
அண்ணாமார் அக்காமார் மைத்துனர்கள்,
அண்ணிமார், மருமகள்மார், பெறாமகள்,
உறவினர், நண்பர்கள்.

215, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# நன்றி நவில்கின்றோம்

டாக்டர் தியாகராஜா அவர்களின்
தந்தையார்

## அமரர் சுப்பர் வைத்திலிங்கம்

அவர்கள்

அமரர் சு வைத்திலிங்கம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் வருகை தந்து உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் மரணச் சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும், மரணச் சடங்கின் போது மலர் மாலைகள் அணிவித்தும் மலர் வளையங்கள் சாத்தியும், கண்ணீர் அஞ்சலிகள், பிரசுரங்கள் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் வெளியிட்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், தமது அனுதாபங்களைத் தெரிவித்த பொது ஸ்தாபனங்களுக்கும், கல்லூரிகளுக்கும், தனிப்பட்டவர்களுக்கும், சகல விதத்திலும் உதவி செய்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

டாக்டர் வை தியாகராஜா குடும்பத்தினர்,
வை. சுப்பிரமணியம் குடும்பத்தினர்.

''ராஜஸ்தான்'',
இருபாலை, கோப்பாய் [29264]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 14 — 06 — 1912



மறைவு: 07 — 01 — 1994

## திருமதி செல்லாச்சி மயில்வாகனம்

வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற மருதையினார் ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், செல்லத்துரையின் அருமைச் சகோதரியும், யாழ்ப்பாணம் காலஞ் சென்ற மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியுமாகிய திருமதி ம செல்லாச்சி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 1994 02-05 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு வில்லூண்டி கேணிக்கரையிலும் சபிண்டீகரண கிரியைகள் 1994 – 02 – 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும் என்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செ. நடராசா,
செ. யோகராசா,
(மருமக்கள்)

66/20, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (29185)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

மலர்வு: 12 — 08 — 1912



உதிர்வு: 06 — 01 — 1994

## அமரர் தா. தம்பையா

(அளவெட்டி வடக்கு)

அன்புடன் எங்களை ஆதரித்து வளர்த்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (05-02-1994) அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெற இருப்பதால், அதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''சிறீ வாசா'',
[illegible]
[illegible] [29267]

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய

# வருடாந்த உற்சவம்

08 – 02 – 94 செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24–02 94 வியாழன் தேரும், 25–02–94 வெள்ளி தீர்த்தமும் நடைபெறும். வீதியிலுள்ள கடைகள் 06–02–94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.

தலைவர்,
ஆலய நிர்வாக சபை.

(29247)

# திருமண வாழ்த்து

நிகழும் ஸ்ரீமுக வருடம் தைத்திங்கள் 23ஆம் நாள் (05-02-1994) இன்று காலை 10 30 க்கும் 12.30 க்கும் இடையில் வரும் சுப வேளையில் எமது மருமகன் கனகரத்தினம் ரவீந்திரனுக்கும், மருமகள் நடராசா ஈஸ்வரிக்கும் Sonders, Auhsan Str 51 - 60326, Frankfurt, Germany இல் நடைபெறும் திருமணத்தில் தம்பதிகளாக இணைகின்றனர். அவர்களை எமது வைரவ, முருகப்பெருமான் அருள்பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்; -

அன்பு அம்மம்மா, மாமா குடும்பத்தினர்,
அ. ஜெயரத்தினம் தம்பதிகள்
(செல்வா வீதி, மூளாய்)

ஓட்டோ காமன்ஸ் நிறுவனத்தினர்,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (6947)

# ஆலோசனைக் கூட்டம்

நூற்றாண்டு எழுச்சி நாட்களைக் கொண்டாடி வரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் பற்றிய ஆலோசனைக் கூட்டம்,

இடம்: யாழ் / சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மண்டபம்
காலம்: 06 — 02 — 1994
நேரம்: காலை 9-00 மணி

பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரும் தயவு செய்து தவறாது சமுகம் தரவும்.

அதிபர், ஆசிரியர்கள்.
[சி-7173] கந்தரோடை - சுன்னாகம்.

யாழ் மாவட்ட வாடகை கார்
உரிமையாளர் அனைவருக்குமான

# முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் வாடகை சேவையில் ஈடுபடும் மோட்டார் கார் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் 07 – 02 - 94 திங்கட்கிழமை அன்று காலை 10 00மணிக்கு யாழ் மத்திய பஸ் நிலைய காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயங்கள் பற்றி ஆராய வேண்டி இருப்பதால், சகல வாடகை மோட்டார் கார் உரிமையாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

— தலைவர்.

(29268)

# விளம்பரங்கள் சேகரிப்பாளர்

தமிழீழத்தில் வெளியாகும் சஞ்சிகை ஒன்றுக்கு ஒழுங்காக விளம்பரங்களை சேகரித்து வழங்கக் கூடிய விளம்பர முகவர் தேவை.

விளம்பரங்கள் சேகரிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். சேகரித்துத் தரப்படும் விளம்பரங்களின் அடிப்படையில் தரகு வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு திகதி; 12-02-94

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
விளம்பர இல, 599,
உதயன்.

[சி-7179]

அமரர் வித்துவான் சி. குமாரசாமி
அவர்களின்

# நினைவஞ்சலிக் கூட்டம்

நயினாதீவு அமரர் வித்துவான் சி. குமாரசாமி அவர்களுடைய நினைவஞ்சலிக் கூட்டமும், பிரார்த்தனையும் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. நா. க. கதிரவேற்பிள்ளை அவர்களின் தலைமையில் 06 – 02 – 1994 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும்.

அமரரின் அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், உறவினரை அதில் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

நயினாதீவு மணிபல்லவ-
கலாமன்றம்.

[சி-7177]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பிரசாரப் போர் சேதனப் பசளை

பிரிட்டனில் உள்ள தமிழர் அமைப்புகளுக்கும், அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெறவிருந்த சந்திப்பு நடைபெறவில்லை என்றும், ரத்துச்செய்யப்பட்டு விட்டதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன

இந்தச் சந்திப்பு நடைபெறாமல் போனதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் செய்த சூழ்ச்சியே காரணம் என்பதும் தெரியவந்துள்ளது உத்தேச சந்திப்பில் கலந்து கொள்ள இணக்கம் தெரிவித்த பிரிட்டிஷ் எம். பிக்களை தமது பக்கம் வசமாக்குவதற்கு லண்டனில் உள்ள ஸ்ரீலங்கா தூதரக அதிகாரிகள் தீவிரமாக உழைத்திருக்கிறார்கள்.

பிரிட்டிஷ்காரர்களே தமது நிர்வாக வசதி கருதி தமிழர்களின் அரசையும், தாயகத்தையும் சிங்கள அரசகளுடன் இணைத்து, இலங்கையாக்கி ஒற்றையாட்சி முறையைக் கொண்டுவந்தார்கள். இலங்கைக்கு விடுதலை வழங்கிய போது தமிழர்களின் அரசை திருப்பிக் கொடுக்காமல் துரோகம் புரிந்தனர்.

தமிழர்களுக்குத் தாம் எஜமானர்களாக இருந்த நிலையை மாற்றி, தமது இடத்தைச் சிங்களவர்களுக்கு வழங்கி, சிங்களவர்கள் தமிழர்களை அடிமைகளாக— இரண்டாந்தரப் பிரஜைகளாக — வைத்திருக்கத் துணை புரிந்து போனவர்கள் பிரிட்டிஷ்காரரே. அவர்களின் அந்தத் துரோகம் சகிக்கமுடியாதது.

அந்தத் துரோகத்தைக் களைவதற்கு — தவறைத் திருத்துவதற்கு — இன்றைய பிரிட்டிஷ் சந்ததியினருக்கு ஒரு சந்தர்ப்பம் —வாய்ப்பு— கிடைத்துள்ளது. தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தும், அங்கீகரித்தும் உதவி, அவர்கள் இழந்த இறைமையை மீளப் பெறுவதற்குத் துணை செய்வது பிரிட்டனுக்கு தார்மீகப் பொறுப்பு உண்டு.

ஆனால் அப்படி ஒரு சிந்தனை அவர்கள் மனதில் உதிக்காமல் தடுப்பதில் ஸ்ரீலங்கா அரசு மிகத் தீவிரமாக உழைத்து வருகிறது. பிரிட்டனில் மட்டுமன்றி ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்துகொண்டு குரல் கொடுக்கும் ஏனைய நாடுகள், அமைப்புகள், குழுக்களிடமும் முழுப் பொய்களைப் பிரசாரம் செய்து அவற்றின் மனங்களைக் குழப்பி வருகிறது ஸ்ரீலங்கா அரசு

தமிழர்களுக்குப் பிரச்சினைகள் எதுவும் இல்லை. கஷ்டங்கள் எதுவுமில்லை. தனி நாடு கோரிப் போராடுபவர்கள் விடுதலைப் புலிகளே. அவர்களை ஒடுக்குவதற்காகவே வடக்கு – கிழக்கில் யுத்தம் நடத்தப்படுகிறது என்ற உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை உலகளாவிய ரீதியில் பரப்புவதில் ஸ்ரீலங்கா அரச அதிகாரிகள் தங்கள் கெட்டித்தனத்தைக் காட்டுகிறார்கள். பேராயர் ஜெயநேசன் ஆஸ்திரேலியா குறித்துக் கூறியது இதற்கு நல்ல உதாரணம்.

ஆகையால்—

தமிழர் போராட்டத்தின் பின்னணி, யுத்தத்துக்கான உண்மையான காரணங்கள், அரசின் அடக்குமுறையால் தமிழர் அனுபவிக்கும் அவலங்கள், அரசபடைகளின் மனித உரிமை மீறல்கள், மனித நேயமற்ற அக்கிரமங்கள் என்பன வெளி உலகத்துக்கு சரியான முறையில், அதற்குரிய அணுகு முறையில் மனதைப் பிடிக்கக் கூடிய வடிவத்தில் முன்வைக்கவேண்டும்.

இங்கே நடத்துகின்ற ஆயுதப் போராட்டம் போன்று வெளிநாட்டில் ஸ்ரீலங்கா அரசு நடத்தும் பொய்ப் பிரசாரத்துக்கு எதிரான பிரசாரப் போரும் தீவிரப்படுத்தப்படவேண்டும். உரிய கட்டமைப்புக்கள், உத்திகள், மூலோபாயங்கள், தந்திரோபாயங்களுடன் வெளிநாட்டு பிரசாரப் போர் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தமிழ் மண்ணின் விடுதலைப் போர் பயிராகி விளைச்சல் தருவதற்கு, வெளிநாட்டு பிரசாரப் போர் சேதனப் பசளை என்பதனை மறந்துவிடலாகாது.

யாழ். நகரப் பகுதியில்

# கட்டாக்காலி நாய் பிடிக்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். மாநகரசபை எல்லைப் பகுதிக்குள் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க இருப்பதாகவும் நாய் வளர்ப்போர் அவற்றை வீட்டு வளவுக்குள் விட்டு அல்லது வளவுக்குள் கட்டி வளர்க்குமாறும் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பகுதியினரிடம் தெருக்கள், பொது இடங்களில் காணப்படும் நாய்களை பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும்—

அவர்கள் தமது பணிகளைச் செய்ய நகர மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும்—

விரைவில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது பிரதேசத்தில் விசர் நாய்க் கடி நோயின் தாக்கம் 1990 – 1992 காலப் பகுதியில் அதிகமாக இருந்து உயிர் இழப்பும் ஏற்பட்டது.

நாம் 1992 ஆம் ஆண்டு மேற்கொண்ட கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழித்தல், வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடுதல் போன்ற நடவடிக்கைகளால், இந் நோயினால் கடந்த வருடத்தில் மாநகரசபைப் பிரதேசத்தில் மரணம் எதுவும் ஏற்படவில்லை.

ஆனால், தொடர்ந்து நாம் விழிப்பாக இல்லாவிட்டால் திரும்பவும் நோயின் தாக்கம் ஏற்படலாம்.

இந்தவருடம் ஒழுங்குமுறையில் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் வளர்ப்பு நாய்கள் சிலவும் பொது இடங்களில், தெருக்களில் போகும் பாதசாரிகளையும், ஏனையோரையும் கடித்துள்ளன இதனால் இவர்களுக்குச் சிகிச்சையும் தடுப்பு மருந்தும் போடும் நிலைமையும் ஏற்பட்டது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

அரச நிறுவனங்களில் இணைந்த

## பயிலுநர்களுக்கான பயிற்சி 1 வருடத்துக்கு மட்டுமே

யாழ்ப்பாணம், பெப். 5

கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் அரச நிறுவனங்களில் பயிலுநர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான பயிற்சி, 1 வருடத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க நிர்வாக அமைச்சு சகல திணைக்களங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக மற்றும் பதில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், இப்பயிற்சிக் காலத்தின்போது அரச நிறுவனங்களில் பயிலுநர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்—

பொறியியல் மற்றும் இதை ஒத்த பிற தொழில் நுட்பத் துறைகளுக்கான பயிலுநர்களுக்கு இச்சலுகைகள் வழங்கப்படமாட்டா என்றும் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-100)

## விசேட ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 5

விசேட ஆசிரியப் பதவிகளை மீண்டும் உருவாக்கி நடைமுறைப்படுத்துமாறு கல்வி அமைச்சரை வேண்டிக் கொள்ளும் விவரமான மகஜர் ஒன்றை அகில இலங்கை வர்த்தகக் கலை மன்றம் அனுப்பியுள்ளது.

''ஆழ்ந்த அறிவும் நீண்ட அனுபவமும் வியத்தகு ஆற்றலும் இருந்தும், நிர்வாகப் பதவிகளைச் சிறிதும் விரும்பாமல், தொடர்ந்தும் ஆசிரியர்களாகவே சேவை செய்வதில் ஆர்வம் உடையவர்களை ஊக்கமூட்டி உற்சாகம் ஊட்டுவதற்காகவும், திறமைசாலிகளை ஆசிரிய சேவைக்கு ஈர்ப்பதற்காகவும்'' விசேட ஆசிரியப் பதவிகளை உருவாக்க வேண்டும் என்று பிரஸ்தாப மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளது. (க)

## சுவிஸில் மாவீரர் தினவிழா

பேர்ன், பெப் 5

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினால் கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி மாவீரர் தின விழா சுவிற்சர்லாந்தில் கொண்டாடப்பட்டது.

மாவீரர் ஒருவரின் தாயார் தேசியக் கொடியை ஏற்றி மாவீரர் தின நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்ச்சிநடைபெற்ற மண்டபத்தின் முன்னே மாவீரர் துயிலும் இல்லம் போன்ற மாதிரி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. அங்கு ஈகைச் சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்ச்சியில் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கலை, பண்பாட்டுக் கழகத்தின் சுவிஸ் கிளையினர் ஏற்பாடு செய்திருந்த கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. பெருந்திரளான மக்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், பெப். 5

மட்டக்களப்பு கரவெட்டியில் கடந்த ஞாயிறன்று காலை படையினரும், ரெலோ குழுவினரும் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளரான இரத்தினசிங்கம் சின்னத்தம்பி (வயது 18 — கரவெட்டி) என்பவர் வீரச்சாவடைந்தார்.

கடந்த செவ்வாயன்று காலை வாகரைப் பகுதியை படையினர் சுற்றிவளைத்த சமயம் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் கந்தையா வசந்தன் (வாகரை) என்பவர் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார்.

இதேவேளை—

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான மதிச்செல்வன் அல்லது தினேஷ் (பொன்னுத்துரை விஜயேந்திர மூர்த்தி — அம்பாறை) என்பவர் கடந்த சனியன்று சுகயீனம் காரணமாக வீரச்சாவடைந்தார். (உ-5)

தமிழ் மக்களுக்கு வசதிகள் மறுப்பு;

## அரசு கூறும் காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாது

பிரிட்டிஷ் மெதடிஸ்த மதகுரு

யாழ்ப்பாணம், பெப். 5

'வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுக்கு அத்தியாவசிய உணவு, இதர பொருள்கள் மற்றும் கல்வி மருத்துவ வசதிகள் போன்றவற்றை வழங்க மறுப்பதற்கு யுத்த சூழ்நிலையை காரணமாக அரசு கூறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.'

யாழ் வந்துள்ள மதகுருமார்கள் குழுவினர் அல்வாய் மெதடிஸ்த தேவாலயத்தில் நடத்திய கலந்துரையாடலில் பிரிட்டனைச் சேர்ந்த அருட்திரு நொமன் சகற் தெரிவித்தார்.

''அப்பாவி மக்களின் தேவைகளை அரசு மறுக்க முடியாது. மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்ய நாம் தொடர்ந்து பாடுபடுவோம்'' என்று அவர் கூறினார். (த-3)

## நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 5

தமிழறிஞரும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளருமான நயினாதீவு அமரர் வித்துவான் சி. குமாரசாமியின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை நடைபெறஉள்ளது.

நல்லூர் இளம் கலைஞர் மன்ற மண்டபத்தில் பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாக இருக்கும் இக்கூட்டத்திற்கு மாவட்ட நீதிபதி நா. க. கதிரவேலுப்பிள்ளை தலைமை வகிப்பார்.

மதத் தலைவர்கள் ஆத்மசாந்தி உரைகளையும், அறிஞர்கள், கல்விமான்கள் அஞ்சலி உரைகளையும் ஆற்றுவர். (அ)

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக

## சிறுபான்மை இனத்தவரின் ஆதரவை கோரக் கூடாது

ஜனாதிபதி விஜே சொல்கிறார்

கொழும்பு, பெப். 5

பெரும்பான்மை இனம் பிளவுண்டு, அதிகாரத்துக்கு வருவதற்கு சிறுபான்மை இனங்களின் ஆதரவைக் கோரக்கூடாது.

அப்படிக் கோரினால் பெரும்பான்மை இனத்தினால் பலனளிக்கக் கூடிய முறையில் செயல்பட முடியாது.

ஆகவே பெரும்பான்மை இனம் பிளவுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி விஜேதுங்கா குருணாகலையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய போது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

மரம் பாதுகாப்பாக இருந்தால்தான் அதில் கொடிகள் படரும். சிறுபான்மை இன மக்களின் நன்மை கருதியும் பெரும்பான்மை இனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

''கட்சி அரசியல் தேசிய ரீதியிலான நடவடிக்கைகளுக்கு இடர்ப்பாடாக உள்ளது கட்சி அரசியல் முறையில் பல குறைபாடுகள் உள்ளன. முன்னணிக்கு கட்சி அரசியலை நாம் தள்ளக் கூடாது''— என்றும் ஜனாதிபதி சொன்னார்.

நாட்டை ஐக்கியப்படுத்தும் விஷயத்தில் திரு. காமினி ஜயசூரியா திடமாக இருப்பதைத் தாம் பாராட்டுவதாகக் கூறிய ஜனாதிபதி ''திரு. ஜயசூரியா போன்று ஒவ்வொருவரும் ஒரு மனதுடன் தீவிரவாதத்துக்கு முடிவு கட்ட வேண்டும். எதிர்காலச் சந்ததிகளுக்காக ஐக்கியபடுத்தப்பட்ட நாட்டை பாதுகாக்க வேண்டும்'' என்று கூறினார்.

## ருகுணுவில் கட்டட பொருள்கள்

யாழ்ப்பாணம், பெப் 5

யாழ் செயலக திருத்த வேலைகளுக்கான மற்றொரு தொகுதி கட்டடப் பொருள்கள் 'ருகுணு' கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்படவிருப்பதாக யாழ். அரச அதிபர் கொழும்பிலிருந்து தகவல் அனுப்பினார்.

அந்தப் பொருள்களை கப்பலில் ஏற்றும் வேலைகள் இரண்டொரு தினங்களில் ஆரம்பமாகும் என அவர் அறிவித்துள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரிக்கான ஒரு தொகுதி மருந்தும், நெசவு நூல் வகைகளும் 'ருகுணு' கப்பலில் எடுத்து வரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ)

கிழக்கு மாகாணத்தில்

# தேர்தல் நெருங்க படைகளின் கெடுபிடிகள் அதிகரிப்பு!

கொழும்பு, பெப்.5

உள்ளூராட்சித் தேர்தல் நெருங்க கிழக்கு மாகாணத்தில் அரச படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் பொது இடங்களுக்கு வரவழைக்கப்பட்டு, அரச சார்பு வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று படையினரால் வற்புறுத்தப்பட்டு வருகின்றனர் என்றும்—

சில இடங்களில் யாருக்கு வாக்களிக்கப் போகின்றீர்கள் என்று கேட்டு படையினரால் தாக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

தமிழக ஆளுநர் கூறுகிறார்

## எனது உயிருக்கு புலிகளால் அச்சுறுத்தல் இல்லை

''விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை''.

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:

புலிகள் இயக்கம் சர்வதேச தொடர்புகளை பெருமளவில் கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டில் அவ்வியக்கத்தின் செயற்பாடுகளில் எந்தவித ஓய்வும் காணப்படுகிறதென்ற முடிவுக்கு வருவது தவறானதாகும் என்றார்

முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான தமிழ் நாடு அரசாங்கம் சட்டம் ஒழுங்கு நிலைவரத்தை கையாளுகின்ற முறை தொடர்பாக கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பதை ஆளுநர் தவிர்த்துக் கொண்டார். (த-3)

## ஆந்திர பொலீஸ் நிலையத்தை இராணுவத்தினர் தாக்கினர்!

ஆந்திர மாநிலம்— ஹைதராபாத்தில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றை இராணுவத்தினர் சிலர் தாக்கியதுடன்—

அங்கிருந்த பொலீஸ் அதிகாரி ஒருவர் உட்பட பல பொலீஸாரையும் அவர்கள் கடத்திச் சென்றனர் என்று யு. என். ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இராணுவத்தினரின் இத் தாக்குதலுக்கான காரணம் உடனடியாக வெளியிடப்படவில்லை.

எனினும்— பொலீஸ் நிலையம் அருகில் உள்ள கிணறு ஒன்றில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரின் இரு உறவினர்களின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்துதான் இத்தாக்குதல் இடம்பெற்று இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது

அவர்கள் கொலை செய்யப்பட்ட பின்னர் அவர்களின் சடலங்கள் கிணற்றினுள் போடப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

## பாக். எல்லை நோக்கி இளைஞர் காங்கிரஸ் பேரணி

காஷ்மீர் முஸ்லிம் பிரிவினைவாதப் போராளிகளுக்கு ஆதரவு தெரிவித்து பாகிஸ்தானில் இன்று சனிக்கிழமை நடத்தப்பட இருக்கும் பொது வேலை நிறுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக பாகிஸ்தான் எல்லையை நோக்கி பேரணி ஒன்றை நடத்தப் போவதாக இந்திரா காங்கிரஸ் இளைஞர் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தப் பேரணியில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் இருந்து திரட்டப்பட்ட காங்கிரஸ் தொண்டர்கள் கலந்து கொள்வார்கள் என்றும்—

பெரும்பாலான தொண்டர்கள் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக, பஞ்சாப் மாநிலத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இளைஞர் இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. விட்டா தெரிவித்தார்.

## 'டெலிக்' ஆங்கில வகுப்புகள் இங்கு நடத்தப்படும்

யாழ்ப்பாணம், பெப் 5

''டெலிக்'' (Delic) ஆங்கில பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளதாக யாழ். கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டில் ஆங்கில ஆசிரியர் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், மேற்படி பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வவுனியாவில் உள்ள 'டெலிக்' நிலையத்திற்கு செல்லுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு வருட காலத்துக்குரிய அந்தப் பயிற்சியைப் பெற இதுவரை வவுனியாவுக்குச் செல்லாதவர்களுக்கே அந்தப் பயிற்சி நெறி யாழ்ப்பாணத்தில் வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட பயிலுனர்களுக்கான மேற்படி பயிற்சி நெறி அடுத்த மாத நடுப்பகுதியில் இங்கு ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

## சொந்த இடங்களுக்கு செல்ல அகதிகளுக்கு வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 5

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளிலும் முகாம்களிலும் தங்கியுள்ள தமிழ் அகதிகளை அவர்களின் சொந்த இடங்களுக்கு உடனடியாகத் திரும்பிச் செல்லும்படி அரசு அதிகாரிகள் வற்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கன்னியா மற்றும் பன்குளம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த தமிழர்களே இவ்வாறு நெருக்குதல் செய்யப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்பாதவர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணம் உடனடியாக நிறுத்தப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளை உடைப்பது மற்றும் அவ் வீடுகளில் உள்ள உடைமைகளை அபகரிப்பது போன்ற நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது (த-எ)

## சிறு தானிய விதைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது!

தற்போது யாழ் குடாநாட்டில் நெற்செய்கையின் பின் மேற்கொள்ளப்படும் சிறுதானிய செய்கைக்கான விதைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை— 3 லட்சம் ரூபா பெறுமதியான எள்ளு, பயறு, கௌப்பி போன்ற விதைகளை கொழும்பில் இருந்து தருவிக்க யாழ். மாவட்ட சமநல சேவைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கான பணம் கொழும்பில் தற்போது தங்கியுள்ள யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும்—

சிறுதானியங்களுக்கான விதைகள் அடுத்து பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் ருகுணு கப்பலில் வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-162)

## இன்று

யாழ், நாவலர் வீதி புதிய கல்வி நிலையத்தின் இவ்வாண்டிற்கான பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ் நீராவியடி நாவலர் மண்டபத்தில் கல்வி நிலைய அதிபர் திரு. த. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறும். (க—162)

★ ★ ★

அராலி இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

சங்கானைக் கோட்டக்கல்வி அதிகாரி திரு ப. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் சங்கானை வட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு மு. முருகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (க-161)

★ ★ ★

தமிழ் கணக்குப் பதியுநர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும்.

அரச உள்ளூராட்சி மாகாண சேவையில் உள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் தமிழ் கணக்குப் பதியுநர்கள் இணைந்து இச் சங்கத்தை ஆரம்பிக்கவுள்ளனர். (உ-117)

★ ★ ★

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூரில் நடைபெறும். அனைத்து புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (க)

★ ★ ★

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு யாழ் செயலகத் திட்டப்பணிப்பாளர் திரு.செ. பத்மநாதன் தலைமையில் விவசாயக் கருத்தரங்கு ஒன்று நடைபெறும்.

காளான் வளர்ப்புப் பற்றிய அறிமுகம், நெற்செய்கை, தேனீ வளர்ப்பு, தென்னைச் செய்கை ஆகியவை குறித்து இக் கருத்தரங்கில் விளக்கமளிக்கப்படும். (உ)

★ ★ ★

வலி தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் இன்று முற்பகலில் அறிவியல் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர்திரு கா.சந்திரராசா தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ஆர். சிர்மாறன் ''பொது சுகாதார சேவைகளும் மக்கள் பங்களிப்பும்'' என்ற விடயம் பற்றியும்—

யாழ். பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலால ''அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அவற்றின் தொழிற்பாடுகளும்'' என்ற விடயம் பற்றியும் உரை நிகழ்த்துவார்கள். இறுதியில் கலந்துரையாடல் இடம்பெறும். (உ-135)

★ ★ ★

தவாலி மகா வித்தியாலயத்தின் பரிசு நாள் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு மகாவித்தியாலய திறந்த வெளி அரங்கில் அதிபர் திருமதி சி. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு இன்று சனிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும். (த-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

### இறைச்சியின் - தற்காலிக விலை.

யாழ்/ மாநகரசபையின் - நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் அனுமதி பெற்றுள்ள மாட்டிறைச்சிக்கடை உரிமையாளர்கள் ஒன்று சேர்ந்து, பாவனையாளர்களையும், மாட்டு கொள்முதல் வியாபாரிகளையும் பாதிக்கா வண்ணம் - தற்காலிகமாக 05-02-94 சனிக்கிழமை தொடக்கம் பரவலாக மாட்டிறைச்சி 80/- ரூபாவாக விற்கப்படும் என்பதை இறைச்சி பாவனையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

யாழ்/ மாநகர சபையின் திருநெல்வேலி, பிரதேச சபையின் அனுமதி பெற்றுள்ள

மாட்டிறைச்சிக்கடை உரிமையாளர்கள்.

(சி/ 7181)


## மரண அறிவித்தல்கள்

திருமதி

### அலிஸ் முத்துமணி அரியரத்தினம்

திருமதி அலிஸ் முத்துமணி அரியரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா தம்பதிகளின் அருமைப் புதல்வியும், திரு. ஆர். எஸ். அரியரத்தினத்தின் (ஓய்வுபெற்ற சிறாப்பர் - இலங்கை வங்கி, மாத்தறை) அன்பு மனைவியும், திருமதி லில்லி பொன்னுத்துரை (மலேசியா), காலஞ்சென்றவர்களான திருமதி ஜெனி, டெனிஸ், துரைரத்தினம், செல்வரத்தினம் (சிங்கப்பூர்), ஜெயரத்தினம், எட்வின் அருளானந்தம் மற்றும் திரு விக்டர் கனகசுந்தரம், திருமதி மங்களம் துரைராசா ஆகியோரின் அன்புச் சோதரியும், காலஞ்சென்ற திருமதி அன்னரத்தினம் வைத்திலிங்கம், திருமதி ஞானம்மா அரியநாயகம் (மலேசியா), காலஞ்சென்ற திருமதி சற்குணம் நாகலிங்கம், மற்றும் திருமதி அருளம்மா துரைரத்தினம், திருமதி பரிமளம் சவுந்தரராஜா, திரு. ஆர். நவரத்தினம், திரு. ஆர். ஜே. குணரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05 - 02 - 1994) பிற்பகல் 2 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆர். எஸ். அரியரத்தினம்

''மெலித்தா'',
707, ஆஸ்பத்திரி வீதி,
(ஸ்ரேசன் சந்தி),
யாழ்ப்பாணம்.

(சி/7183)

### MRS. KATY FORMAN

திருமதி K. T. போமன் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ் சென்ற திரு. H. T. போமன் அவர்களின் அன்பு மனைவியும், திரு. E. K போமன் (Retired Head Guard, Railways), திரு. T.N. போமன் (ADDITIONAL REGISTRAR GENERAL NORTHERN REGION) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி நீற்றா, திருமதி அஞ்சலா (லீலா), ஆகியோரின் மாமியாரும், திருமதி மரியா மோசஸ் (கனடா) Dr. பெப்பெச்சுவா போமன் (போதனா வைத்திய சாலை, கொழும்பு), விக்ரர் ஜீவா போமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று பிற்பகல் 3 30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, யாழ். பேராலயத்தில் திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
T. N. போமன்
(மகன்)

126 சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(29278)

### ஜெனிபர் எலிசபேத் செல்வமதி

ஜெனிபர் எலிசபேத் செல்வமதி (யாழ் திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவி) 03-02-94 இல் காலமானார்.

அன்னார் A.V.A J விஜயரட்ணம், சாந்தா விஜயரட்ணம் ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும், கலாமதி (டுபாய்), சேகர் (சவுதி), நிலாமதி (டுபாய்), சுதாமதி (சவுதி), குமார் (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரியும், அல்பி (f) (டுபாய்), றாஜி (கொழும்பு), கொலின் (டுபாய்), சாள்ஸ் (சவுதி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மிதுனன் (டுபாய்), ஸ்ரெபனி (சவுதி) ஆகியோரின் அருமைச் சித்தியும், காலஞ்சென்ற N.S P நாதன், லில்லிநாதன் (மிருசுவில்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.02.94) காலை 8 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
அ லியோ

16/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[7182]

### பொன்னையா தவேந்திரராசா

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வீதியைச்சேர்ந்த பொன்னையா தவேந்திரராசா 04.02.94 இல் காலமானார். அன்னார் தனேஸ்வரியின் அன்புக்கணவரும் கயல்விழி, பிறையழகன், வடிவழகன் ஆகியோரின் அன்புத்தந்தையும் தவராஜா [பிரான்ஸ்], இராஜகுமாரி, தவக்குமாரி, மகேந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04 02.94 இல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்!
மனைவி, பிள்ளைகள்

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

[29279]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## டி. பியின் அ'புர பேச்சுக்கு தமிழ்க் குழுக்கள் ஆட்சேபம்

கொழும்பு, பெப் 5

சிங்கள பௌத்தர் ஒருவர் தான் ஜனாதிபதி பதவிக்கு வரவேண்டும் என்ற பொருள்பட ஜனாதிபதி விஜேதுங்கா அனுராதபுரத்தில் இவ்வாரம் நடைபெற்ற கூட்டத்தில் பேசியதற்கு பல தமிழ்த் தலைவர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இது போன்ற மனப்பாங்கு நிலவுவதால் தான் சிறுபான்மை மக்களின் ஒற்றுமை உணர்வு இல்லாது உள்ளது என்று தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பேச்சுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் சுதந்திர தினம் அன்று தாம் தேசியக் கொடியைப் பறக்கவிடப்போவது இல்லை என்றும் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார். (உ-எ)

### நாளை

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபை ஏற்பாடு செய்துள்ள காரைநகர் மாணவர்களுக்கான திருமுறைப்பண்ணிசைப் போட்டி நாளை காலை 8. 30 மணிக்கு நாவலர் ம. வி. இல் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் பிரதேச கருத்தரங்கு நாளை காலை 9.30 மணிக்கு சங்கானை மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (உ-89)

மதஸ்தானத்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்று நாம் பிரேரித்தோம். சில சிரேஷ்ட புத்தகுருமாரும் இந்த ஆலோசனைக்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

அவர்களுடன் சேர்ந்து நாம் ஒரு குழுவாக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்காமல் சமாதானம் ஏற்பட முடியாது.

வடக்கு — தெற்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒரு போதும் பொருந்தாது. அரசியல் தீர்வே இச் சந்தர்ப்பத்தில் தேவையானது. தீர்வு நியாயமானதாகவும் அமைய வேண்டும் — என்று கூறினார்.

இதற்குமுன்னதாக மெதடிஸ்ததிருச்சபையின் உப-தலைவர் திருமதி ஆன். அபேசேகரா கொழும்பு தெற்கு, கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த சபையினரின் வாழ்த்துகளையும் அன்பார்ந்த கரிசனையையும் பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பொதுக்கூட்டம் ஜெபத்துடன் ஆரம்பமாகி ஜெபத்டன் முடிவுற்றது. (த

முல்லைலயில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம் 25 லொறிகளை மட்டுமே எடுத்துச்சென்றோம்.

இத்தகைய பின்னணியை எமது அமைப்பு ஆராய்ந்தது. அதன் பின்னரே பாதுகாப்பு வழங்கும் பணியை நிறுத்தினோம்.

இன்று அங்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் உணவுத் தட்டுப்பாட்டுக்கு எமது அமைப்பு பொறுப்பல்ல. அரசாங்கமே பொறுப்பு.

அரசாங்கம் தேவையான பொருள்களை அனுப்பவேண்டும்.

மீண்டும் அங்கு போர்நிலை மிக மோசமாகி வாகனங்கள் செல்ல முடியாத நிலை உருவாகும் போது மட்டுமே. வாகனங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதை மேற்கொள்ளலாம்— என்று திரு. பிரலா தெரிவித்தார். (அ-3)

ஆஸ்பத்திரி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்திய சாலை பாதுகாப்பு வலயம் மீதான ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களை நிறுத்துதல், யாழ். மாவட்டத்துக்கான அத்தியாவசியப் பொருள்கள் அனுப்புதல், கைதிகள் விவகாரம் உட்பட மற்றும் பல விடயங்கள் குறித்து இப்பேச்சுக்களின் போது ஆராயப்பட்டதாக தெரியவந்தது.

நேற்று மாலை ஜெனிவா திரும்பவிருந்த அவர் தமது இலங்கை விஜயம் தொடர்பான விவரமான அறிக்கையை தமது தலைமையகத்துக்கு சமர்ப்பிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

செய்யாத..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பர் ஒருவரும் உள்ளடங்கிய பல உயர் நிலை பொலிஸ் அதிகாரிகள் கடந்த கிளர்ச்சிக் காலத்தின்போது அவர்கள் செய்யாத, காணாத வீரதீரச் செயல்களுக்காக அரசாங்கத்திடம் இருந்து இலட்சக்கணக்கான ரூபா பணத்தை சன்மானங்களாகப் பெற்றுள்ளனர் என்றும் அ[illegible] வாதியான சிரேஷ்ட [illegible] அதிபர் தெரிவித்[illegible] (உ-6)

### விளையாட்டு நிகழ்வுகள்

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ். றோட்டறக்ட் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று—

காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆடு களத்தில் டென்னிஸ் ஆட்டங்களும்—

காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மாணவர் பொது அறையில் சதுரங்க ஆட்டங்களும் இடம்பெறும்.

★ ★ ★

அரியாலை 75 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களை ஒட்டி நடத்தப்படும் — 7 பேர் அணிகளுக்கிடையிலான — 12 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 9 மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும். இன்று நான்கு ஆட்டங்களும் நாளை நான்கு ஆட்டங்களும் இடம் பெறும்.

''செட் அப்'' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்றும் நாளையும் மாலை 4 மணி முதல் அருணோதயா சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும். (உ)

### மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், பெ 5

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில் கலாவித்தகர் க கண்ணதாசனிடம் மிருதங்க இசை பயின்ற செல்வன் மெற்றாஸ் மயில் கஜனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும்.

நாட்டுக்கூத்து கலைஞரும், வேலணை கல்விக் கோட்ட நிர்வாக அதிகாரியுமான செ. மெற்றாஸ்மயிலின் புதல்வனான கஜனின் இவ் அரங்கேற்றம் யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. மு இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் பங்குபற்றுவர். (அ-3)

### சிவாச்சார்ய பரீட்சைகள்

குருகுலங்கள் பல இணைந்து நடத்தும் சிவாச்சார்ய பரீட்சைகள் இம்மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நடைபெற உள்ளன.

காலைவேளைகளில் அர்ச்சகாசார்ய பரீட்சையும், பிற்பகலில் ஸ்சபனாச்சார்ய பரீட்சையும் நீராவியடி சிவானந்த குருகுலத்தில் நடைபெறும் என்று குருகுல அதிபர் சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தெரிவித்தார்.

சிவானந்த, கணபதீஸ்வர, குருமார் ஒன்றிய, தர்ம சாஸ்தா ஸ்ரீதேவி, துர்க்கா குருகுலங்கள் இணைந்து இப் பரீட்சைகளை நடத்துகின்றன. (அ)

பருத்தித்துறை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

கொழும்புக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் குமணா கப்பல் சேவையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு [illegible] [illegible] தெரிந்திலையே. (உ-3)

## தப்பியோடும் படையினர் வெளிநாடுகளில் தலைமறைவு

யாழ்ப்பாணம், பெப். 5

படைகளில் இருந்து தப்பி ஓடுபவர்களில் சிலர் வெளிநாடுகளில் தலைமறைவாகி வருவதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைத் தடுப்பதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பணிபுரியும் இரகசியப் பொலிஸாருக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளனவாம்.

கடந்த வாரம் வெளிநாட்டுக்குச் செல்ல இருந்த கண்டி மாமடுவைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலிஸார் கைது செய்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

### மத்தியஸ்த வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் மத்தியஸ்தர் பயிற்சி வகுப்புகள் நாளை முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 10 மணி தொடக்கம் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். வடக்கு கல்வி வலயத்தில் முகாமையாசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சை நாளை காலை கல்லூரியில் உள்ள கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என யாழ் வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு கந்தசாமி தெரிவித்துள்ளார். [உ-3]

### கருத்தரங்கு

யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் பிரதேசக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பப்பாடசாலையில் நடைபெறும். (த-89)

### பிற்போடப்பட்டது

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இன்று நடைபெற இருந்த ''தேனிசை மழை'' நிகழ்ச்சி எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)

யுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. ஆனாலும் அவை அரசியலில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தா.

ஏனெனில் சிங்கள மக்கள் மத்தியில் சமாதானம் பற்றிய கருத்தே நிலவி வருகின்றது

கடந்த ஆண்டு நான் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது — மனிதாபிமான அடிப்படையில் — எதுவித நிபந்தனைகளும் இன்றி விடுதலைப் புலிகள் இயக்க தலைவரால் இரண்டு ஸ்ரீலங்கா பொலிஸ் யுத்தக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இச்செயல் விடுதலைப் புலிகள் மீதும் அதன் தலைவர் பிரபாகரன் மீதும் சிங்கள மக்கள் நம்பிக்கை வைக்கும் அளவுக்கு மிகுந்த வரவேற்பைப் பெற்றது — என்றார். (உ-3)

அரசியல். .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் இராணுவ நடவடிக்கைக்குத் தயாராவதாகக் கருதலாம்— என்று வெரித்தாஸ் தெரிவித்தது.

கடுமையான கண்டனம்

இலங்கை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தமிழ்ப் பிரிவினைவாதிகள் மீது கடுமையான கண்டனக் கணைகளை தொடுத்திருக்கிறார். நாடு செழிக்க வேண்டுமானால் அவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்—

புலிப்படையினர் தம் சொந்த இன மக்களையே இம்சைப்படுத்துவதாக அவர் குற்றம் சாட்டினார்—

பாதுகாப்புப்படையினரை தொடர்ந்து எட்ட நிறுத்தி வைத்திருக்கும் பிரிவினைவாதக் குழுவுக்கு அதிகமாக இருப்புப்பிடிக் கொள்கையை கடைப்பிடிக்க அவர் பூண்டுள்ள உறுதியே அவரின் சுதந்திர தின உரை மீண்டும் எடுத்துக் காட்டுகிறது—

ஆனால் புலிப்படையினரை நசுக்கி விடுவதால் தாங்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தமக்கு கூடுதலான தன்னாட்சி வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கைகளுக்கு முடிவு காணப்போவதில்லை— என்று பி. பி. ஸி. [illegible]மாசையின் விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது. (அ-எ-6-3)

## புதிய உபவேந்தரைத் தெரிவு செய்ய யாழ். பல்கலைக்கழக கவுன்ஸில் விரைவில் கூடும்

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ் பல்கலைக்கழக புதிய உப வேந்தரை தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழக கவுன்ஸில் விரைவில் கூடவிருக்கிறது.

பல்கலைக்கழக உபவேந்தராகப் பணியாற்றி வரும் பேராசிரியர் அ. துரைராஜா அடுத்த மாதம் 31 ஆம் திகதியுடன் தமது பதவியை விட்டு விலகிச் செல்கிறார்.

அவரது ராஜினாமாக் கடிதத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்கும் பட்சத்தில் புதிய உப-வேந்தரை தெரிவு செய்வதற்காக கவுன்சில் கூடும்.

புதிய உப-வேந்தர் பதவிக்கு மூன்று விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் அவை கொழும்புக்கு அனுப்பப்படும் என்றும்—

மூன்றுக்கு கூடுதலான விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து கவுன்ஸிலில் தேர்தல் நடைபெற்று, மூவர் தெரிவு செய்யப்படுவர் என்றும், தெரிவிக்கப்பட்டது.—

அதேவேளை—

யாழ். பல்கலைக்கழக கவுன்ஸிலுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட எட்டு உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் 17 ஆம் திகதி முடிவடைவதாகவும்—

புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்ட பின்னரே இனி கவுன்ஸில் கூடும் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### திறந்த பல்கலை மாணவருக்கு

யாழ்ப்பாணம், பெப் 5

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலைய மாணவர் நலன்புரி அமைப்பின் சகல உறுப்பினர்களையும் மற்றும் 90ஆம் ஆண்டிற்குப் பின் கற்கைநெறிகளுக்குப் பதிவு செய்த சகல மாணவர்களையும் நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் சமுகம் தரும்படி யாழ் பிராந்திய நிலைய இயக்குனர் ச. ஆ ஞானேந்திரன் கோட்டுள்ளார். (த)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், பெப். 5

கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் மகிழவெட்டுவான் நெல்லிச்சேனை என்னுமிடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் திருநேசன் அல்லது சுந்தர் (கந்தையா ஜெயச்சந்திரன் — இருதயபுரம், மட்டக்களப்பு) வீரமரண மடைந்தார் [உ-3]

### வீடியோ பட வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 4

யாழ். மாவட்ட சமூகத் தொடர்புக் கருவிகள் பணிமனையினால் 'ஒளி எங்கே' என்ற வீடியோப் பட வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு புனித ஆசீர்வாதப்பர் ஆலய வளாகத்தில் இடம்பெறும்.

விழாவில் யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-17)

### மருத்துவ மாணவர் ரயில்மோதி மரணம்

கொழும்பு, பெப். 5

கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒருவர் ரயில் மோதியதால் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்படுகிறது. இவர் நான்காம் ஆண்டு மருத்துவ மாணவர் ஆவார்.

பம்பலப்பிட்டி ரயில் பாதையால் நடந்துசென்று கொண்டிருந்த இவரை மாத்தறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ருஹுணுகுமாரி ரயில் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த எ-6)

### சித்தாந்த பண்டித பரீட்சை

சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படும் சித்தாந்த பண்டித பரீட்சைகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 15 என்று அறிவிக்கப்படுகின்றது. (த)


யாழ் பல்கலைக்கழக

### கலைப்பீட மாணவர்கள் வழங்கும்

## 'பொய்க்கால்' [நாடகம்]

இடம் : யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
காலம் : 06 - 02 - 94 ஞாயிறு பி.ப. 4 30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**அன்பளிப்பு: 10/-**

விளம்பர உதவி:

மனோ லைட்ஸ்
கோப்பாய்

[29275]

## JAFFNA COLLEGE ANNUAL PRIZE GIVING

Our Annual Prize - Giving will take place on Saturday 12 February, 1994 at 4-00 p.m. in the College Quadrangle;

CHIEF GUESTS

THE RT. REV. KENNETH M. FERNANDO
and
MRS. CHITRA FERNANDO

Parents, Alumni, Friends and well wishers are cordially invited.

G. RAJANAYAGAM,
Principal.

Vaddukoddai,
04 - 02 - 1994

[C-7180]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org